மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

79—

பேருந்துப் பணிமனை

***5457—திரு. கு. லிங்கமுத்து:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டில் பேருந்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதி பேர்ணாம்பட்டில் 22 பேருந்துகளுடன் வாடகைக் கட்டடத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை செயல்பட்டு வருகிறது. மேற்படி பணிமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட, பேர்ணாம்பட்டு கிராமம் சர்வே எண் 376/2 மற்றும் 299–இல் நிலம் தேர்வு செய்யப்பட்டு, 1.8 ஏக்கர் நிலம் உரிமம் மாற்றம் செய்யக் கோரி, வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 30–1–2012 ஆம் நாளிட்ட கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. மேற்படி நிலம் வருவாய்த் துறையின்மூலம் ஒப்படை செய்யப்பட்டபின், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவு பெற்று பணிமனை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேருந்துப் பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*